மின் அஞ்சல்

318

330

நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம், சேப்பாக்கம், சென்னை–5

ந.க. எண் : 47435/2009/ஆர்–3 நாள். 19 . 10. 2009.

சுற்றறிக்கை.

பொருள் குத்தகை – மாநகராட்சி / நகராட்சிகளுக்கு சொந்தமான அங்காடிகள் பேருந்து நிறுத்தங்கள், வாரச் சந்தைகள் மிதிவண்டி மோட்டார் வாகன நிறுத்தங்கள், கட்டணக் கழிப்பிடங்கள், தங்கும் விடுதிகள் போன்ற குத்தகை இனங்களில் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விடுவது குறித்து பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் குறித்து.

பார்வை இவ்வலுவலக சுற்றறிக்கை எண் 53114/2008/ஆர்–2 . நாள். 04.02.2009.

*******

பார்வையில் காணும் இவ்வலுவலக சுற்றறிக்கையினைத் தொடர்ந்து கீழ்காணும் அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிப்பேராணை மனு எண் 18973/2008–இல் அங்காடிகள் பேருந்து நிலையக் கடைகள், வாரச் சந்தைகள், மிதிவண்டி நிறுத்தங்கள், கட்டணக் கழிப்பிடங்கள், தங்கும் விடுதிகள், வணிக வளாகக் கடைகள் போன்ற இனங்கள் கட்டணம் வசூலிப்பதற்கு உரிமம் வழங்க குத்தகை விடும் போது ஏலம் / ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு நாளிதழ்களில் விளம்பரம் வெளியிடப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பல நகராட்சிகளில் பரவலாக படிக்கக் கூடிய உள்ளூர் நாளிதழ்களில் ஏல அறிவிப்புக்கள் வெளியிடப்படுவதில்லை. இது தொடர்பாக பார்வையில் கண்ட இவ்வலுவலகச் சுற்றறிக்கையில் உள்ளவாறு பரவலாகப் படிக்கக்கூடிய பரவலான சுற்றில் உள்ள நாளிதழ்களில் விளம்பரம் வெளியிடப்பட வேண்டும். மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலரைத் தொடர்பு கொண்டு நேரில் பேசி காலதாமதமின்றி விளம்பரம் வெளியாகும் வண்ணம் இப்பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.

உள்ளூர் நாளிதழ்களிலும் வெளியிடப்படுவதோடு (Widely Circulated Newspapers) ஏலத்தொகை கூடுதலாகக் கிடைக்குமாயின் தேவைப்படின் மாநில அளவு

ஆங்கில தமிழ் நாளிதழ்களிலும் மிகச் சிறிய அளவில் வெளியிடப்பட வேண்டும். விளம்பரம் வெளியிடப்பட்ட நாளுக்கும் ஏலம் / ஒப்பந்த புள்ளி நடத்தப்படும் / பெறப்படும் நாளுக்கும் இடையில் தெளிவான 15 நாட்கள் இருக்க வேண்டும். உதாரணமாக 1–ம் தேதி விளம்பரம் நாளிதழில் வரப்பெற்றால் 17–ம் தேதி அல்லது அதற்குப் பின்பு ஏலம் / ஒப்பந்தபுள்ளி நடத்தப்பட வேண்டும். ஆனால் மேற்கண்ட நடைமுறை பல நகராட்சியில் பின்பற்றப்படாமல் ஏலத்தில் போட்டிகள் தவிர்க்கப்பட்டு நகராட்சிக்குக் குறைந்த வருமானமே கிடைக்கும் நிலை இருக்கின்றது. இந்நிலை முற்றிலும் விதிக்குப் புறம்பானதாகும். மேலும், ஏலம் / ஒப்பந்தபுள்ளி நிபந்தனைகள் மிகப்பெரிய அளவில் நகராட்சி அலுவலகம் மற்றும் ஏலம் நடைபெறும் இடத்தில் மிகப் பெரிய அளவில் விரிவாக தகவல் / விளம்பர பலகை மூலம் அனைவரும் படிக்கும் வண்ணம் வைக்கப்பட வேண்டும்.

எனவே, ஏற்கனவே இவ்வலுவலக சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளபடி மேற்கண்ட விதிமுறைகளை தவறாமல் பின்பற்றுவதுடன் அனைத்து மத்திய மற்றும் மாநில அலுவலகங்களின் அறிவிப்புப் பலகையில் ஏல விளம்பரம் வெளியிடப்பட்டு ஒப்புதல் பெற வேண்டும். மேற்படி நெறிமுறைகளைஅனைத்து மாநகராட்சி / நகராட்சி ஆணையர்கள் தவறாது கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இனிமேல் இது போன்ற இனங்களில் வழக்குத் தொடரும் நிலை ஏற்பட்டால் அல்லது ஆணையர்கள் விதிமுறைகளுக்கு மாறாக நடந்து நகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படின் சம்பந்தப்பட்ட ஆணையர்கள் மற்றும் அலுவலர்கள் மீது (Executive Authority) ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/– ப. செந்தில்குமார்.
நகராட்சி நிர்வாக இயக்குநர்.

பெறுநர்

1. அனைத்து மாநகராட்சி ஆணையர்கள் / நகராட்சி ஆணையர்கள் / செயல் அலுவலர்கள்
2. அனைத்து நகராட்சி மண்டல நிர்வாக இயக்குனர்கள்.

//ஆணைப்படி / அனுப்பப்படுகின்றது. //

கண்காணிப்பாளர்.